FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.) (Under Section 173 BNSS)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120378

1. District : ஈரோடு மாவட்டம் | PS: பெ.பு.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 09/AC/2025 முத.அ. எண் | Date: நாள் 11.11.2025

2. (i) Act சட்டம்: prevention of Corruption Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: 7(b)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 01/11/2025 | Date to : நாள் வரை 11/11/2025

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் பிமன் 13.00 hs. | Time to : நேரம் வரை அமன் 14.30 hs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.11.2025 | Time : நேரம் 16.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D.Vol. IV | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுந்து நேம் நடட்சி எய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: அமன் 35. கி.மீ. மேற்கு
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கனிணுதியம் "அ" பிரிவு நிர்வாக அலுவலகம் மற்றும் மட்டாத்தியர் அலுவலகம், கோபிசெட்டி பாளையம், ஈரோடு மாவட்டம்

(c) In case cutside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ஏ.மைனர் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name: நாகராஜ் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1980 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : இந்தியன் நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் பாதுகாப்பு பிரிவு | (g) Address : முகவரி D.No. 13/12, K.A.S காலனி மொடச்சூர் கோபிசெட்டிபாளையம் ஈரோடு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைபெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) மாண்புமிகுமன, மாண்புமிகு மாவட்ட மட்டாத்தியர் மட்டாத்தியர் அலுவலகம் கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்

2) திரு.நிலவன், நிர்வாக அலுவலர் கனிணுதியம் "அ" பிரிவு

8. Reasons for delay in reporting by the complainant / Informant: கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமின்மை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/11/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 11.11.2025

15. Date & Time of despatch to the court: 11.11.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 20.30 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண்

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr. No 9/AC/2025 u/s 7(b) of PC Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M.விஜயலட்சுமி ஆகிய நான் இன்று 11.11.2025 ஆம் தேதி மாலை 18.30 மணிளயவில் நிலைய அலுவலில் இருந்தபோது திருமதி.A. ஜெயா (45), த/பெ ஆசைதம்பி, கதவு எண். 13/12 கே.ஏ.எஸ் காலனி, மொடச்சூர், கோபி தாலூக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் A. ஜெயா (45), த/பெ ஆசைதம்பி, கதவு எண். 13/12 கே.ஏ.எஸ் காலனி, மொடச்சூர், கோபி தாலூக்கா, ஈரோடு மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. ஐயா, நான் ஈரோடு மாவட்டம், கோபி தாலூக்கா, மொடச்சூரில், கே.ஏ.எஸ்.காலனி, க.எண். 13/12ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் +2 வரை படித்துள்ளேன். நான் ப்ளக்ஸ் பிரின்டிங் ஜாப் ஒர்க் செய்து வருகிறேன். என் அம்மா மகேஸ்வரியுடன் பிறந்தவர்கள் குயிலம்மாள், சாந்தி, ஈஸ்வரி மற்றும் துரைராஜ் ஆவார். என் அம்மாவின் அப்பா முத்துசாமி ஆவார். அவருடன் பிறந்தவர்கள் ஆபேல் மற்றும் ஞானமுத்து. பூர்வீகமாக மூன்றுபேருக்கு பாத்திய பட்ட சொத்து கோபி தாலூக்கா, கலிங்கியம் கிராமத்தில் 62 செண்ட் காலி இடம் இருந்தது. அதில் பெரிய தாத்தா ஆபேல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் காலி இடத்திற்கு என் அம்மா மகேஸ்வரி, பெரியம்மா குயிலம்மாள், சித்திகளான சாந்தி மற்றும் ஈஸ்வரி ஆகியோர்களும், மேலும் மற்றொரு தாத்தா ஞானமுத்துவின் மகன் ஜோசப்க்கும் பாத்தியப்பட்டது. எனது அம்மா மற்றும் அவர்களுடன் பிறந்தவர்களின் பெயர்களை பட்டாவில் சேர்க்க வேண்டியிருந்தது. என் அம்மா மற்றும் அவருடன் பிறந்தவர்களுக்கு வயதாகி விட்டதாலும், அவர்கள் அலைய முடியாத காரணத்தினால் என்னை பட்டா சம்மந்தப்பட்ட வேலைகளை கவனித்துக்கொள்ளுமாறு சொல்லிருந்தார்கள். எனவே நான் ஆபேல் அவர்களின் வாரிசு சான்று மற்றும் இறப்பு சான்றுகளை கோபி ஆர்.டி.ஒ அலுவலகத்திலிருந்து வாங்கியிருந்தேன். அதன்பின்னர் 30.09.2025 தேதியன்று என் அம்மா மகேஸ்வரி, பெரியம்மா குயிலம்மாள், சித்திகள் சாந்தி, ஈஸ்வரி மற்றும் மாமா ஜோசப் ஆகியோர்களின் பெயர்களை பட்டாவில் சேர்க்க

ஆன்லைன் மூலம் என் சித்தி ஈஸ்வரியின் பெயரில் நான் விண்ணப்பித்திருந்தேன். அதன்பிறகு விண்ணப்பம் தொடர்பாக கலிங்கியம் ஆ கிராம மணியகாரர் சசிகுமார் அவர்களை நேரில் சந்தித்து பட்டா சம்மந்தமாக விபரத்தை சொன்னேன். அவர் நான் சொன்ன விபரத்தை கேட்டுவிட்டு, பார்கிறேன் என்று சொன்னார். ஆனால் அந்த விண்ணப்பம் ரத்தாகி விட்டது. அதன்பின்னர் நான் மீண்டும் அவரிடம் நேரில் சென்று ஏன் ரத்தானது என்று கேட்டபோது, அவர் காலதாமதமாகி விட்டதால் விண்ணப்பம் ரத்தாகிவிட்டது என்று சொன்னார். அதனால் நான் மீண்டும் 17.10.2025 ஆம் தேதி மொடச்சூரில் கே.எம்.எஸ் திருமண மண்டபத்தில் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெற்றபோது, அங்கு சென்று பட்டாவில் என் அம்மா வகையாறாவை பெயர் சேர்க்க வேண்டி மீண்டும் விண்ணப்பித்திருந்தேன். ஆனால் அந்த விண்ணப்பமும் ரத்தாகி விட்டது. மணியகாரர் சசிகுமார் என்னை போனில் தொடர்பு கொண்டு மீண்டும் பட்டாவில் பெயர் சேர்க்க ஆன்லைனில் விண்ணப்பிக்க சொன்னார். அதனால் நான் 25.10.2025 ஆம் தேதி என்சித்தி ஈஸ்வரி பெயரில் மீண்டும் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். நான் பட்டா சம்மந்தமாக எனது செல்போன் எண். 95971 73537 லிருந்து மணியகாரரின் செல்போன் எண்.99652 12085 க்கு தொடர்பு கொண்டு பேசியபோது என்னை நேரில் வரச்சொன்னார். நான் 01.11.2025 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் கலிங்கியம் ஆ கிராம மணியகாரர் அலுவலகம் சென்று சசிகுமார் அவர்களை நேரில் சந்தித்தேன். அவர் என்னிடம் சொத்து சம்மந்தப்பட்ட விபரங்களை கேட்டு தெரிந்துகொண்டு என்னை அங்கேயே இருக்க சொன்னார். அவர் மதியம் சுமார் 1.00 மணியளவில் என்னை கூப்பிட்டு பட்டாவில் பெயர் சேர்க்க பரிந்துரை செய்து விட்டேன். நீங்கள் ஜோனல் டெப்டி தாசில்தார் மணிமேகலை அவர்களை சென்று பார்க்கனும், அவர்களை கவனித்தால் தான் உங்க அம்மாவின் வகையறாக்களின் பெயர்களை பட்டாவில் சேர்ப்பார்கள் என்று கூறினார். மேலும் மணியகாரர் சசிகுமார் அவர்கள் என்முன்னாலேயே டீடி அவர்களுக்கு போன் செய்து கலிங்கியம் கிராமம் ஈஸ்வரியின் பெயரில் உள்ள விண்ணப்பம் ஏற்கனவே ரத்து செய்தது சம்மந்தமாக பேசினார். மேலும் தற்போது பட்டாவில் பெயர்களை சேர்க்க பரிந்துரை செய்து விட்ட விபரத்தை டீடி அவர்களிடம் தெரிவித்தார். மணியகாரர் பேசி முடித்துவிட்டு, என்னிடம், நீங்கள் டீடி மணிமேகலை அவர்களை நேரில் சென்று பாருங்கள் என்றும், அவர்கள் இந்தவேலைக்காக ரூ.30,000/- கேட்டுள்ளார் என்றும்

கூறினார். மேலும் என்னிடம் அவரை நேரில் சந்திக்க சொன்னார். நானும் எதுவும் கூறாமல் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் 04.11.2025 தேதி கோபி தாலூக்கா அலுவலகம் சென்று டீடி மணிமேகலை அவர்களை பார்க்க சென்றபோது டீடி மேடம் அலுவலகத்தில் இலலை. பின்பு நான் 05.11.2025 ஆம் தேதி காலை சுமார் 11.15 மணியளவில் கோபி தாலூக்கா அலுவலகம் சென்று டீடி மணிமேகலை அவர்களை பார்த்தேன். டீடி மேடம் அவர்கள் என்னிடம் சொத்து சம்மந்தமான விபரங்களை கேட்டுத்தெரிந்து கொண்டார். பின்பு என்னை மணியகாரரை நேரில் சென்று பார்த்து பேசிவிட்டு வாங்க என்று அனுப்பிவிட்டார். அதன்பின் நான் 06.11.2025 தேதி காலையில் மணியகாரரை பார்பதற்காக அவர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு அவர் இல்லாததால் எனது செல்போன் மூலம் அவரை தொடர்பு கொண்டுபேசியபோது, அவர் ஸ்ரீமணி மஹாலில் நடக்கும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமிற்கு செல்வதாகவும், அங்கே வந்துவிடுமாறு சொன்னார். நான் கலிங்கியம் அருகே உள்ள ஸ்ரீமணி மஹாலுக்கு சென்று அங்கு முகாமிலிருந்த மணியகாரர் சசிகுமார் அவர்களை பார்த்தேன். அங்கே கூட்டம் அதிகமாக இருந்தால் என்னை மாலை 5 மணியளவில் அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார். நான் மாலை சுமார் 5.30 மணியளவில் மீண்டும் மணியகாரர் அலுவலகம் சென்றேன். அப்போது அவர் அலுவலகத்தில் இல்லாததால் அவரிடம் போனில் கேட்டபோது இன்னும் முகாமில் இருப்பதாகவும், முகாமிற்கு வருமாறு சொன்னார். நான் மாலை சுமார் 6 மணியளவில் ஸ்ரீமணி மஹாலுக்கு சென்று அவரை சந்தித்தபோது அவர் பட்டாவில் சேர்க்கவேண்டிய பெயர்களை சேர்க்க பரிந்துரை செய்து விட்டதாகவும், டீடி மேடம் அவர்கள் அதுசம்மந்தமாக அவரிடம் பேசியதாகவும், அவர்களும் வேலையை முடித்து விடுவதாக சொல்லிவிட்டார் என்றும், ஏற்கனவே சொன்னவாறு அமௌண்ட் ரூ.30,000/- கொடுத்து விடுமாறும் சொன்னார். நான் முப்பதாயிரமா, அந்த தொகை அதிகமாக இருக்கிறது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்க என்று கேட்டேன். அவர் தொகை குறைப்பது சம்மந்தமாக டீடி மேடத்தை பார்த்து பேசிக்கொள்ளுங்கள், ஒருவேலை டீடி மேடம் உங்க விண்ணப்பத்தை ரத்து செய்தாலும் செய்வார், நீங்க டீடி மேடத்தை பார்த்து தொகை குறைப்பது சம்மந்தமாக பேசிக்கொள்ளுங்கள் என்றும் சொன்னார். மேலும் டீடி மேடம் அவர்கள் பணத்தை என்னிடம் தான் கொடுக்க சொல்வார் என்றும் சொன்னார். எனவே நான் 07.11.2025 தேதி கோபி தாலூக்கா அலுவலகம் சென்று

பார்த்தபோது டிடி மேடம் அலுவலகத்தில் இல்லை. அங்கு இருந்தவர்களிடமிருந்து டிடி மணிமேகலையின் செல் எண்.9627936147 வாங்கி எனது செல்போனிலிருந்து டிடி மணிமேகலையின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசியபோது தான் வெளியில் இருப்பதாகவும், நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். ஆனால் நான் மீண்டும் 10.11.2025 ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு கோபி தாலூக்கா அலுவலகம் சென்றபோது டிடி மேடம் பிசியாக இருந்தார்கள். நான் அங்கேயே காத்திருந்தேன். அப்போது வேறு வேலையாக கலிங்கியம் ஆ மணியகார் சசிகுமார் அங்கு வந்தார். அவர் என்னையும் கூட்டிச்சென்று டி.டி மேடத்திடம் எனது விண்ணப்பம் சம்மந்தமாக அனைத்து விபரங்களையும் விளக்கிச்சொன்னார். பின்பு என்னை மணியகார் தனியாக அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து டிடி மேடம் பட்டாவில் பெயர்களை சேர்த்து விடுவார், பணம் சம்மந்தமாக அவர் சொல்வதுபோல் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி சென்றுவிட்டார். பின்னர் நான் டிடி மணிமேகலை மேடம் அவர்களை பார்த்து கொஞ்சம் சீக்கிரம் முடித்து கொடுங்கள் என்று கேட்டதற்கு மணியகாரர் பணம் சம்மந்தமாக என்ன சொன்னார் என்று கேட்டார். அப்போது நான், மணியகாரர் நீங்கள் கேட்டதாக ரூ.30,000/- கேட்டார் என்றும், ஆனால் என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்றும், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று மணியகாரரிடம் கேட்டேன். அதற்கு மணியகாரர் உங்களையே பார்த்து பணம் குறைப்பது சம்மந்தமாக கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறியதை டிடி மேடம் அவர்களிடம் சொன்னேன். அதற்கு டிடி மேடம் அவர்கள், அப்ப எவ்வளவு கொடுப்பீங்க என்று கேட்டுவிட்டு, சரி ரூ.20,000/- கொடுத்து விடுங்கள், நான் உங்க வேலையை முடித்து கொடுக்கிறேன் என்றும், பணத்தை மணியகாரரிடமே கொடுத்து விடுங்கள் என்றும் கூறினார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு தொகை இல்லை என்றும், தொகை ஏற்பாடு செய்வதற்கு இரண்டு நாள் ஆகும் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் 10.11.2025 தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது மணியகாரர் சசிகுமார் என்னை போனில் அழைத்து உங்கள் பட்டா உத்திரவை டிடி மேடம் இன்றே போட்டு விடுவார்கள், நீங்கள் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் மறுநாள் வந்து வாங்கி கொள்கிறேன் என்று சொன்னதற்கு அவர் சரி என்று சொன்னார். இன்று 11.11.2025 தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் கலிங்கியம் மணியகாரர் சசிகுமார் அவர்கள்

என்னை வாட்ஸ்அப் காலில் அழைத்து பட்டாவை வாங்கிட்டிங்களா என்று கேட்டார். அதற்கு நான் வாங்கவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நாளைக்கு பணத்துடன் என் ஆபீஸ்க்கு வந்து என்னைபார்த்து பட்டாவை என்னிடமே வாங்கிக்கொள்ளுங்கள் என்றும், நான் ஆபீஸில் இல்லை என்றால் போன் செய்யுங்கள் என்று சொன்னார். என் அம்மா மற்றும் சகோதரிகளின் பெயர்களை பட்டாவில் சேர்ப்பதற்கு டிடி மணிமேகலை அவர்களுக்கும் மற்றும் கலிங்கியம் ஆ கிராம மணியகாரர் சசிகுமார் அவர்களுக்கும் பணம் ரூ.20,000/-ஐ லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட டிடி மணிமேகலை மற்றும் கலிங்கியம் ஆ கிராம மணியகாரர் சசிகுமார் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd. (XXXXX) 11.11.2025 (Jaya).

Madam, Received the above said Tamil computer typed complaint on 11.11.2025 at 18.30 hrs. Sd/- (xxxxxxxx) 11.11.2025 M.Vijayalakshmi, Inspector of Police, V&AC, Erode.

Madam, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the both accused were found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai, today on 11.11.2025 at 19.15 hrs, I registered a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.09/AC/2025 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 against the A1 Tmt.Manimegalai, Zonal Deputy Tahsildar, Gobichettipalayam Taluk, Erode District and A2 Tr.Sasikumar, VAO, Kalingayam B Village, Gobichettipalayam Taluk, Erode District. Sd/- (xxxxxxxx) 11.11.2025 M.Vijayalakshmi, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tmt.A.Jaya, D/o Asaithambi, Door No.13/12 KAS Colony, Modachur, Gobi Taluk, Erode District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(M.Vijayalakshmi)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.